## கோடை காலத்தில் மக்களுக்கு

# குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கிடும் வகையில் பணிகள் மேற்கொள்வீர்!

### சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் – அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

சென்னை, பிப்.16-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப் ப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (14-ஆம் தேதி) சென்னை கலைவாணர் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களையும் அவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் சிறப்பாக செயல் படுத்தி வருகிறார். நகர்ப்புரப் பகுதிகளில் நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் குடிநீர் வசதிகள், கழிவுநீர் வசதிகள், சாலைகள் உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்களில் 70 சதவிகிதம் அளவிற்கு நகர்ப்புரப் பகுதிகளில் வசித்தும், நகர்ப்புரத்திற்கு வருகை தந்து செல்வதுமாகவும் இருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் குறிப்பாக சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, மின்விளக்கு வசதிகள், பூங்காக்கள் பேருந்து நிறுத்தங்கள், சுகாதார சேவைகள், விளையாட்டுத் திடல்கள்,

திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகளும் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது!**

இப்பணிகளை அலுவலர்கள் தங்களது கடமைகளாகக் கொண்டு சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். தொடங்கிய திட்டப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். நீண்ட நாட்களாக நடைபெறுகின்ற திட்டப் பணிகளை உடனடியாகத் தொடங்கி பணிகளை முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். கோடை காலத்தில் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கிடும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சென்னையில் மழைநீர் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக அதிக மழை பொழியும் போது, மழைநீர் விரைந்து வடிந்து ஓடிடும் வகையில் மழைநீர் வடிகால்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போல மற்ற மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளிலும் சாலைகளில் தேவைப்படும் இடங்களில் வடிகால்கள் அமைக்கும் போது தகுந்த முன் திட்டத்தோடு அதனை அமைத்திட வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களும் நகர்ப்புரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. பணிகளில் ஏற்படும் தாமதத்தினைத் தவிர்த்திடும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆலோசித்து பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.

சட்டமன்ற வரவு செலவு திட்ட அறிக்கையில் நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டும், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உடனுக்குடன் செய்து தருவதற்கான நடவடிக்கைகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தற்போதைய நிலவரம் குறித்தும், தாமதமாக நடைபெறும் பணிகளுக்கான காரணங்கள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து, அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். முன்னுரிமை பணிகளான சாலைகள், குடிநீர், கழிவுநீர், கழிவறை வசதிகள் மற்றும் மின் மயானம், அறிவுசார் மையங்கள், மார்க்கெட் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

40 ஆண்டுகளுக்கு பழமையான பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், மக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகம் செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். மயான சாலைகளில் பல இடங்களில் சாலைகள் குறுகலாக உள்ளது. இதற்கு முன்னுரிமை தந்து சாலைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

2021-22, 2022-23, 2023-24 ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் பல இடங்களில் முடிக்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் நீதிமன்ற வழக்குகள் இருந்தது. இந்த வழக்குகள் தற்போது முடிக்கப்பட்டு, அந்த இடங்களிலும் பணிகள் நடைபெற்று வருகிறது. அறிவிக்கப்பட்ட திட்டங்கள் 90 சதவிகிதம் அனைத்து இடங்களிலும் முடிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 10 சதவிகிதம் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. சாலைகள், மழைநீர் வடிகால்கள், பேருந்து நிறுத்தங்கள், மார்க்கெட் மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட நகராட்சிகளில் மக்களுக்கு தேவையான தண்ணீர் வழங்கிடும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. அதன அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 134 நகராட்சிகள் மற்றும் 24 மாநகராட்சிகளில் கடந்த நான்கு வருடங்களில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், சீர்மிகு நகரத் திட்டம், மூலதன மானிய நிதி, அம்ரூத் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்), நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும் ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி மற்றும் ஜெர்மானிய வங்கியின் நிதியின் மூலமும் மொத்தம் ரூ.29,084 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**உட்கட்டமைப்பு பணிகள்!**

செங்கல்பட்டு மற்றும் வேலூர் மண்டலங்களில் உள்ள 39 நகராட்சி மற்றும் 6 மாநகராட்சிகளில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், மூலதன மானிய நிதி, அம்ருட் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்), நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் மொத்தம் ரூ.7862 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர்வசதி, பாதாள சாக்கடை வசதி உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் முன்னேற்றம் குறித்து நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் ஆய்வு செய்து நடைபெற்று வரும் திட்டப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசித்து அது தொடர்பான முன் தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் தலைவர் / நிருவாக இயக்குநர் முனைவர் எஸ்.விஜயகுமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் கள், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **கிருஷ்ணகிரி மேற்கு, ஓசூர் மாநகரம் – தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம்** ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஓசூர் மாநகரம்**

அமைப்பாளர் இ.இரத்தினசிங், எல்ஜஜி 511/3, ராகோட்டை ஹட்கோ, ஓசூர்.

துணை அமைப்பாளர்கள் 1) யு.அருள்குமார், எல்ஜஜி 1031, ராகோட்டை ஹட்கோ, ஓசூர்.

2) எம்.முஹமத் ஷரிப், 83, சிப்பாய் பாளையம், ஓசூர். 3) ஆர்.ரஞ்சித்குமார், 86, பழைய மத்திகிரி, ஓசூர். 4) சி.பிரவீன் குமார், ஆச்சாரி லேஅவுட், ஓசூர். 5) ஜி.சுப்ரிதா, 3/207எ, ஆவலப்பள்ளி கிராமம், ஓசூர்.

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் அ.ராம்குமார், 888, 3 தெரு, மங்களபுரம், மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் 1) டி.விக்னேஷ்துரை, 2249, முனுசாமி கோவில் சந்து, சக்கநாயக்கன் தெரு, தஞ்சாவூர். 2) ஜி.சந்தோஷ்குமார், 1921, தாஸ்தாமால் சந்து, தஞ்சாவூர். 3) எஸ்.சூரியா, 3315, வானியத்தெரு, கரந்தை, தஞ்சாவூர். 4) டி.சி.எஸ்.எஸ்.சந்தோஷ்குமார், 173, கீழவண்டிக்காரத்தெரு, தஞ்சாவூர். 5) ப. பிரீத்தி, 65, அந்தோணியார் கோவில் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 14.02.2025.

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு
### பிப்ரவரி 16 (1978)



கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.

சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.

1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு "சிந்தனைசிற்பி சிற்றரசு" பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# பிரதமர் மோடியே! தமிழ்நாடும் இந்தியாவில்தானே உள்ளது!

**பா.**ஜ.க ஆளும் மாநிலங்கள் மற்றும் இந்தி பேசும் மக்கள் அதிகம் வாழும் மாநிலங்களுக்கு மட்டுமே அதிக நிதியும் அடுத்தடுத்து திட்டங்களும் வாரி வழங்குவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. இந்தி பேசாத அம்மொழியை எதிர்க்கும் தென்மாநிலங்கள், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களை புறக்கணிப்பதோடு நிதியும் ஒதுக்காமல், திட்டங்களும் தராமல் ஏதோ பகை நாட்டின் மாநிலங்களைப் போல் வெறுப்போடு தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகிறார்.

அதுவும் தமிழ்நாடு என்றப் பெயரைக்கூட தமிழச்சி என்று கூறிக் கொள்ளும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தான் வாசித்த நிதி நிலை அறிக்கையில் இடம்பெறவிடாமல் தடுத்துள்ளார். சாதுர்யமான தமிழச்சி தான். இவர் தான் 8 முறை நிதிநிலை அறிக்கை வாசித்தவர் என்ற பெருமைக்குரியவராம். பீற்றிக் கொள்கிறார்.

ஐ.நா.விற்குப் போனால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று தமிழில் உள்ள அழகிய சொற்றொடரைப் பெருமையாக பேசுகிறார். முன் தோன்றி மூத்த மொழி தமிழ் மொழி தான் என்றும் அந்த உலகின் மூத்த மொழி தமிழ் இந்தியாவில் இருப்பது நமக்குப் பெருமை என்கிறார். ஒரு பா.ஜ.க. எம்.பி. தருண்விஜய்ஜ ஏவி விட்டு திருவள்ளுவர் சிலையை தூக்கி வரச் செய்தார். ஆனால் அச்சிலை எங்கு தூக்கி வீசப்பட்டது என்பது மோடி அவர்களுக்குத்தான் தெரியும். தருண் விஜய் என்பவரை ஆளையே காணோம்.

புதிய கல்விக் கொள்கை என்று ஒன்றை உருவாக்கி அதை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதும் அதில் இந்தியும் சமஸ்கிருதமும் திணிக்கப்படும் திட்டம் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு அறிஞர் அண்ணா கொண்டு வந்த இரு மொழிக் கொள்கைக்கு எதிரானது என்றும் எங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு எந்தக் கல்வியைத் தர வேண்டும் என்பது எங்கள் உரிமை என்று கூறி ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்கவில்லை என்பதற்காக தமிழ்நாட்டு கல்விக்கு தரவேண்டிய நிதி ரூ.2152 கோடியை தராமல் குஜராத், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுத்து தனது வன்மத்தை காட்டியுள்ளார் பிரதமர் மோடி.

இந்தியா மதச்சார்பற்ற நாடாக அரசியலமைப்பு சட்டப்படி இருக்க வேண்டுமானால் பா.ஜ.க. அரசு மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது மதத்தால் மக்கள் பிளவுண்டு போகக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் இந்தியா கூட்டணியை உருவாக்கி ஒத்தக் கருத்துள்ள கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து மைனாரிட்டி அரசாக பா.ஜ.க. அரசை தள்ளாட வைத்தவர் தான் எங்கள் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இந்தியா கூட்டணியை உருவாக்கும் போது தீவிரமாக இருந்த நிதீஷ்குமார் என்ன மிரட்டலோ மூன்று மாதத்திலேயே பா.ஜ.க. கூட்டணிக்கு ஓடினார்? ஆனால் உறுதியாக நின்று எதிரியாக நினைப்பவரை வீழ்த்துவதையே திடமாகக் கொண்டவர் தளபதி அவர்கள் தான்.

அதனால் தான் தமிழ்நாட்டுக்கு 8 முறை பிரச்சாரத்திற்கு வந்தும் பா.ஜ.க.விற்கு ஒரு சீட்டைக் கூட பெறமுடியவில்லை. தனது கொள்கையில் தீர்க்கமாக நின்ற கழக தலைவரின் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை 40க்கு 40தீலும் வெற்றி பெற வைத்தனர். ஆனால் பா.ஜ.க. வெற்றி பெறப்போவதாக அமித்ஷாவும் மற்ற தலைவர்களும் கூறியது 400 எம்.பி.க்கள் என்பதாகும். ஆனால் அவர்கள் வெற்றி பெற்றதோ வெறும் 240 எம்.பி.க்கள் தான். அதாவது மைனாரிட்டி அரசு.

பா.ஜ.க. 500 வாக்குகளில் வெற்றி பெற்ற தொகுதிகள் 50. 1000 வாக்குகளுக்குள் வென்ற தொகுதிகள் மட்டும் 100. ஆக தமிழ்நாட்டைப் போல் பணியாற்றியிருந்தால் மற்றும் நிதிஷ்குமார் போன்றவர்கள் ஓடாமல் இருந்திருந்தால் இந்த 150 சீட்டுகளில் 75 சீட்டுகளை இழந்திருப்பார்கள். இன்று மோடி பிரதமராகவே இருந்திருக்க முடியாது.

டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மியும் காங்கிரஸ் கட்சியும் கூட்டணியாக நின்றிருந்தால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்திருக்கவே முடியாது. இருவரும் தற்போது உணர்ந்து என்னாவது?

இந்தியா சுதந்திரம் அடைந்த போது அமெரிக்க 1 டாலர் மதிப்பு இந்தியா ரூபாயில் 2 மட்டுமே இருந்தது. தி.மு.க. கூட்டணியில் இருந்த மன்மோகன் சிங் அரசின் காலத்தில் 2014ல் அமெரிக்க டாலருக்கு இந்தியா ரூபாய் 68ஆக இருந்தது. ஆனால் நிர்வாகத் திறன்மிக்க பா.ஜ.க. அரசில் அமெரிக்க டாலருக்கான இந்திய மதிப்பு 87 ரூபாய் வெகு விரைவில் 100 ரூபாய் வந்தாலும் ஆச்சரியமில்லை. இதுதான் பா.ஜ.க. ஒன்றிய அரசின் சாதனை.

இந்தியாவில் மெட்ரோ ரயில் பாதை போடப்பட்டது 1000 கி.மீ. இதில் தமிழ்நாட்டுக்குப் போடப்பட்ட பாதை வெறும் 54 கி.மீ. இது எந்த விதத்தில் நியாயம் ? உ.பி.யில் 5 மெட்ரோ ரயில், மகாராஷ்டிராவில் 4 மெட்ரோ, குஜராத்தில் 2 மெட்ரோ, ம.பி.யில் 2 மெட்ரோ தமிழ்நாட்டிற்கோ ஒன்றே ஒன்று! பிரதமர் மோடியே இது தமிழகத்தை வஞ்சிப்பதில்லையா?

அறிவியல் தொழில்நுட்பத் துறைக்கு சீனா ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 43 லட்சம் கோடி. இந்தியா அந்தத் துறைக்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு தெரியுமா? 1.25 லட்சம் கோடி தான். இந்தப் பணம் இன்றைய அறிவியல் துறை முன்னேற்றத்திற்கு போதுமா? இஸ்ரோ நிலவின் தென்புறத்திற்கு ராக்கெட் வெற்றிகரமாக விட்டது. போட்டிபோட்டு விட்டது ரஷ்யா. ஆனால் வெற்றியடையவில்லை. சீனா அதற்கான முயற்சியில் முதல் நிலையில் தான் உள்ளது. இச் சூழலில் அண்டை நாடாக சீனாவை விட நாம் முன்னணியில் இருக்க வேண்டாமா? நிதி இல்லை என்பார்கள். அதானி, அம்பானி போன்ற பெரும் கார்ப்பரேட்டுகளுக்கு பா.ஜ.க. அரசு தள்ளுபடி செய்த தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.25 லட்சம் கோடி.

இது அவசியமா? இந்த தள்ளுபடி செய்யப்பட்ட நிதியை அறிவியல் துறைக்கு கொடுத்திருக்கலாமே பிரதமர் மோடி அவர்களே! நாட்டு நலனைவிட நண்பர்கள், பணக்காரர்கள் நலன் தான் உங்களுக்கு முக்கியமாக தெரிகிறதா?

கல்வியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. அதுமட்டுமல்ல 17 துறைகளில் முதலிடத்தில் உள்ளது என்று ஒன்றிய அரசின் பொருளாதார அறிக்கை கூறியுள்ளது.

பெட்ரோல் டீசல் விலை தற்போது பீப்பாய் 70 டாலர் தான் அதுவும் ரஷ்யாவிலிருந்து குறைந்த விலைக்கு வாங்குகிறோம். இந்த நிலையில் பெட்ரோல் விலை 56 ரூபாய்க்குள் தான் விற்கப்பட வேண்டும். மன்மோகன் சிங் ஆட்சியில் பீப்பாய் 100 டாலர் விற்றபோது அன்றைய பெட்ரோல் விலை 58 ரூபாய் தான். அதற்கான வரியை குறைத்து பெட்ரோல் - டீசல் விலையை ஏன் குறைக்கவில்லை ? இதில் அதானிக்கு கிடைத்த லாபம் எவ்வளவு தெரியுமா 38 லட்சம் கோடி. ஏழைகள் உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா? இது தானா பா.ஜ.க.வின் ஆளுமைத் திறன்?

நிர்வாகத்தில் சிறந்தவர்கள் என்று பீற்றிக் கொள்கிறீர்களே உங்கள் நிர்வாகத்தின் வெளிப்பாடே கும்பமேளா கொலைகள். இதை மரணம் என்று சொல்லாமல் கொலை என்கிறேனே என கோபம் வரத்தான் செய்யும். வி.ஐ.பி.களுக்கு வழங்கப்பட்ட சலுகை மற்றும் முக்கியத்துவம், பாதுகாப்பு மக்களுக்கு வழங்கவில்லையே. அதனால் தான் இத்தனைப் பேர் கொல்லப்பட்டனர். ஒரு வி.ஐ.பி.யாவது அதாவது பா.ஜ.க.வை சேர்ந்தவர் ஒருவராவது மரணித்தாரா? இது நம் விருப்பமில்லை. இருந்தாலும் அப்பாவி மக்கள் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனரே அதற்காக கேட்கிறோம். உண்மையில் எத்தனை பேர் இறந்தார்கள் என கணக்குக் தெரியவில்லையா? இதுதான் உங்கள் நிர்வாக லட்சணமா?

குஜராத்தில் நடந்த வன்முறையில் இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்த எம்.பி. ஈசன் ஜாப்ரி கொல்லப்பட்டார். அவருடைய மனைவி ஜாகியா ஜாப்ரி 20 ஆண்டுகள் நீதி கேட்டு போராடினார். தற்போது அவரும் இறந்து விட்டார். அவருக்கு நீதி வழங்கப்பட்டதா? ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை?

2024 ஆம் ஆண்டு மட்டும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் 834 நடைபெற்றிருக்கிறதே! பலரை பல மாதங்களாக எதற்காக சிறையில் அடைத்து வைத்திருந்தீர்கள். அவர்கள் செய்த குற்றம் வீட்டில் புனித நூலான பைபிள் வைத்திருந்தது தான். இதை நாடாளுமன்றத்தில் கேரளாவை சேர்ந்த எம்.பி. ஜான் பிரிட்டாஸ் கேள்வியாக எழுப்பியிருந்தார். இதற்கு என்ன உங்களால் பதில் தரமுடிந்தது?

இந்தியா வந்து விட்டு சென்ற முன்னாள் அமெரிக்க அதிபர் பைடன் வியட்நாமில் செய்தியாளர்களிடம் "There is no religious freedom in India" என்றாரே! அதற்கு உங்களால் என்ன பதில் தர முடிந்தது.

தற்போது டிரம்ப் அதிபரானவுடன் இந்தியாவை சேர்த்த மக்கள் 104 பேரை இராணுவ விமானத்தில் கை கால் மற்றும் இடுப்பில் விலங்கிட்டு மனிதாபிமான முறையில் அனுப்பி வைத்தாரே குழந்தைகளுக்கும் விலங்கு போடப்பட்டிருந்ததே இதைக் கண்டித்தீர்களா? இதற்கு என்ன எதிர்வினை ஆற்றினீர்கள்? அமெரிக்க ட்ரம்புக்கு எதிராக முணுமுணுக்கக் கூட துணிச்சல் வரவில்லையே ஏன்? 140 கோடி இந்தியர்களும் தலைகவிழ்ந்து நிற்கின்றனர். இன்னும் சட்ட விரோத குடியேற்றமென்று 7 லட்சம் பேரை இந்தியாவிற்கு அனுப்ப உள்ளனராம். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறைந்தபட்சம் உங்கள் அமெரிக்கப் பயணத்தை ரத்து செய்கிறேன் என்றாவது கூறி இருக்கலாமே! இப்படி சீனர்களை டிரம்ப் அனுப்புவாரா? அவர்தான் இந்தியாவை வல்லரசு ஆக்கப் போகிறாராம்.

கொலம்பியா அதிபர் டிரம்பின் இச்செயலைக் கண்டித்துள்ளார். மெக்சிகோ நாட்டுப் பொருள்களுக்கு வரி கூடுதலாக டிரம்ப் விதித்ததை கண்டித்தார் அந்நாட்டு பிரதமர். உடனே டிரம்ப் வரியைக் குறைத்தார். அவர்களுக்கு உள்ள துணிச்சல் விரிந்த பெரும் மார்பு கொண்ட நம் பிரதமர் மோடிக்கு ஏன் வரவில்லை ? பயமா! பதட்டமா! பம்பலா! இல்லை பதுங்கலா! பதில் சொல்வீரா?

கடந்த ஆண்டு போராடிய விவசாயிகள் என்ன கேட்டார்கள். குறைந்தபட்ச ஆதார விலை? இதுவரை கொடுத்தீர்களா? அப்போராட்டத்தை ஆரம்பத்திலேயே பேசி நிறுத்தி இருந்தால் அப்பாவி விவசாயிகள் 726 பேர் உயிரிழந்திருக்க மாட்டார்களே ? இந்தியா விவசாய நாடு என்பதை மறந்து விட்டீர்களா? தமிழ்நாடு விவசாயிகள் டில்லியில் 100 நாட்கள் போராடினார்கள். ஒரு நாளாவது அவர்களை நீங்கள் பார்த்தீர்களா? விவசாயிகள் என்றால் அவ்வளவு அலட்சியமா? விவசாயி ஏரில் கைவைக்க வில்லையென்றால் நீங்கள் சோற்றிலும் சப்பாத்தியிலும் கை வைக்க முடியாது?

தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காவிட்டால் எப்படி திராவிட மாடல் அரசு நடக்கும் என்று நிதி தர மறுக்கிறீர்கள். அதற்காக உங்களிடம் மண்டியிட்டு மன்றாடி கெஞ்சப் போகிறவரல்ல எங்கள் முதல்வர் தளபதி. ஒருநாளும் அது நடக்காது. நிதியை தரவில்லையென்றாலும் நிலை குலைந்து போய் நிர்வாகம் செய்ய முடியாமல் எங்கள் முதல்வர் செயல்பாடு நிற்காது.

இப்படி எத்தனை எத்தனையோ கேள்விகள் உங்களுக்கு எதிராக தொடுக்கத் தயாராக இருக்கிறது. அதற்கு உங்களால் நிச்சயம் பதில் தர முடியாது.

இந்த லட்சணத்தில் நான் ஒரு கன்னடியன் என்று கூறிக் கொள்வதை பெருமையாக கருதுகிறேன் என்ற அண்ணாமலை மகா யோக்கியர் போல் வெள்ளை அறிக்கை கேட்டுள்ளார். மேலும் எங்கள் முதல்வர் அண்ணாமலையைக் கண்டால் பயப்படுகிறாராம் என்னே கற்பனை? பா.ஜ.க. தலைவர் ஆன பின்பு பல்லாயிரம் கோடி இவருக்கு எப்படி கிடைத்தது? சொல்வாரா?

வெள்ளை அறிக்கை அல்ல உங்களுக்கு தனியாக கருப்பு சிவப்பு வண்ண அறிக்கையே தருகிறோம். அதில் நாங்கள் கேட்கப் போகும் கேள்விகளுக்கு முடிந்தால் பதில் தரப்பாருங்கள். தேவையற்று எங்கள் கழகத் தலைவரை சீண்டாதீர்கள். ஐ.பி.எஸ். படித்துவிட்டால் அரசியலில் ஞானி என எண்ணாதீர்கள் ? அதுவேறு! இதுவேறு! கேட்கிறேன் கேள்விகள் அதுவரை பொறுத்து இருங்கள். கால் ஊன்ற இடமில்லை காட்டுக் கூச்சல் எதற்கப்பா?

ஈரடி நான்கடி கற்றவர்கள் நாங்கள். உங்கள் வாயடி கையடி எங்களிடம் எடுபடாது.